பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 18 திங்கட்கிழமை (31-05-1993) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 184

# ரெலோ - பொலீஸார் மன்னாரில் மோதல்

## நிலைமையைக் கட்டுப்படுத்த இராணுவம் அழைக்கப்பட்டது

கொழும்பு, மே 31

மன்னாரில் ஸ்ரீலங்கா பொலிஸாருக்கும் ரெலோ குழுவினருக்கும் இடையில் நேற்று முன்தினம் மோதல் ஏற்பட்டது இதனையடுத்து நிலைமையைக் கட்டுப்படுத்த அங்கு இராணுவம் அழைக்கப்பட்டது.

கொழும்பில் அதிகாரிகள் நேற்று இத்தகவலை வெளியிட்டனர்.

வவுனியாவிலிருந்து மன்னாருக்குச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றுக்கு காவலாகச் சென்ற ரெலோ குழுவைச் சேர்ந்த இருவரை, வழியில் சோதனை நிலையம் ஒன்றில் பஸ்ஸை வழிமறித்துச் சோதனையிட்ட பொலீஸார் தடுத்து நிறுத்தினர் என்றும்—

தடுத்து வைக்கப்பட்ட ரெலோ உறுப்பினரை பொலீஸ் அதிகாரி ஒருவர் தாக்கியதை அடுத்தே இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. (உ-எ-6)

# பேச்சுக்கள் மூலம் மட்டுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## இல்லையேல் சிக்கல் தொடரும் என்கிறார் ரணில்

கொழும்பு, மே 31

இனப்பிரச்சினைக்கு எவ்வாறாயினும் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும். அல்லாவிட்டால் என்றைக்குமே பிரச்சினையைத் தீர்த்து வைக்கக்கூடியதாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இராணுவ ரீதியாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது தீவிரமான கருத்துக்கள் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளன. மங்கள முனசிங்க தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பலவிதமான யோசனைகள் ஆராயப்பட்டன. இப்போதுள்ள விவகாரம் புதிய யோசனைகள் முன்வைக்கப்பட வேண்டும் என்பதல்ல. ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள

(6 ஆம் பக்கம் பார்க்க)

# காலியில் இருந்து 'வாதுவ' பொருள்களை ஏற்றி வரும்

தற்சமயம் பருத்தித்துறையில் மா இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 'வாதுவ' கப்பல் அடுத்த தடவை காலி துறைமுகத்தில் இருந்தே உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை இங்கு ஏற்றி வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு துறைமுகத்தில் தற்சமயம் ஏற்பட்டுள்ள இட நெருக்கடி காரணமாக இந்த ஏற்பாட்டை புனர்வாழ்வு புனரமைப்பு சமூக நலத்துறை அமைச்சு எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சனிக்கிழமை அளவில் மாவை இறக்கி முடித்து திரும்பும் 'வாதுவ' காலித்துறை முகத்திலேயே பொருள்களை ஏற்றிக்கொண்டு அங்கிருந்து பருத்தித்துறைக்கு மீண்டும் திரும்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து பொருள்கள் லொறிகள் மூலம் காலிக்கு எடுத்துச் செல்லப்பட்டு 'வாதுவ' கப்பலில் ஏற்றப்படும் எனத் தெரிய வருகிறது. (ஒ-3)

# வெளிநாட்டுத் தூதர்களை விஜேதுங்கா சந்திப்பார்

கொழும்பில் உள்ள சகல வெளிநாட்டுத் தூதர்களையும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா விரைவில் சந்திப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் கொள்கை மற்றும் நாட்டின் இன்றைய நிலைவரம் பற்றி எல்லாம் தூதர்களுக்கு ஜனாதிபதி அப்போது விளக்கிச் சொல்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் திரு. விஜேதுங்கா வெளிநாட்டுத் தூதர்களைச் சந்திக்க இருப்பது இதுவே முதல்தடவையாகும்.

## அரசின் பிடிவாதப் போக்கால்

# காவலிலிருக்கும் பொலீஸார் உண்ணாவிரதம் இருப்பர்?

விடுதலைப் புலிகளிடம் போர்க் கைதிகளாக இருக்கும் 38 பொலீஸாரும் ஒரு இராணுவச் சிப்பாயும் ஸ்ரீலங்கா அரசின் பிடிவாதப் போக்குக் காரணமாக ஜூன் 13 ஆம் திகதி முதல் சாகும் வரை உண்ணா விரதப் போராட்டத்தில் குதிக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

செய்தி ஏஜென்ஸிகள் நேற்று இத் தகவலை வெளியிட்டன.

இது குறித்து வெரித்தாஸ் வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டதாவது:-

விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் தாங்கள் சிறைபிடிக்கப்பட்டு எதிர்வரும் ஜூன் 13 ஆம் திகதியுடன் 3 ஆண்டுகள் நிறைவடைவதால் இதுவரை தங்களை விடுவிக்க ஸ்ரீலங்கா அரசு எவ்வித முயற்சியும் எடுக்காமல் இருப்பதைக் கண்டித்து, தாம் சாகும் வரை உண்ணா விரதத்தில் இறங்கப் போவதாக மேற்படி கைதிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரியில் அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ யாழ். சென்றதை அடுத்து விடுதலைப் புலிகள் தமது நல்லெண்ணத்தைக்

[2 ஆம் பக்கம் பார்க்க]

# மாறி மாறி ஆட்களை கடத்தி பணயக் கைதிகளாக்கினர்

மன்னாரில் ரெலோவுக்கும் பொலீஸாருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதை அடுத்து இரு தரப்பினரும் மாறி மாறி மற்றைய தரப்பைச் சேர்ந்தவர்களைக் கடத்திச் சென்று பணயக் கைதிகளாக்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பஸ்ஸில் வந்த ரெலோ அமைப்பினரை பொலீஸார் வழிமறித்துத் தடுத்து வைத்ததை அடுத்து —

ரெலோ குழுவினர் மன்னார் நகரைச் சேர்ந்த இரண்டு பொலீஸாரைக் கடத்திக் கொண்டுபோய் தங்களது முகாமில் பணயக் கைதிகளாகத் தடுத்து வைத்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இராணுவம் அழைக்கப்பட்டதை அடுத்து, இராணுவம் இப்பிரச்சனையில் நேரடியாகத் தலையிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ-6)

# ஜெயந்திபுர அதிரடியில் பெண் புலிகள் முன்னணி

கொழும்பு, மே 31

பொலன்னறுவ மாவட்டத்தில் ஜெயந்திபுரவில் நேற்று முன்தினம் அதிகாலை இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவே முன்னணியில் நின்றதாகவும்—

சுமார் 300 விடுதலைப் புலிகள் போராளிகள் இத்தாக்குதலை நடத்தினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்தாக்குதலின் போது இராணுவத்தினர் தங்கள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் உத்தரவிட்டனர் என்றும் தெரிவதாகவும் வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

ஜெயந்திபுர தாக்குதலில் 6 படையினர் பலியானதும், படையினரின் 15 காவல் அரண்களும் அவர்கள் தங்கி இருந்த 10 வீடுகளும் தாக்கி அழிக்கப்பட்டன என்பதும்—

விடுதலைப் புலிகள் அங்கிருந்து பெருவாரியான ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றினர் என்பதும் தெரிந்தவையே, (ஒ-எ)

# தெரிவுக்குழுவுக்கு ஐ.தே.க. யோசனை தரவேண்டும்

## கட்சியினர் டி. பியிடம் வலியுறுத்து

கொழும்பு, மே 31

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தனது யோசனையை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி சமர்ப்பிக்கவேண்டும் என்று அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவையும் கட்சி உயர் மட்டத்தையும் வலியுறுத்தி வருவதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.

# செஞ்சிலுவை அதிகாரிகள் இளவாலை செல்வர்

யாழ்ப்பாணம், மே 31

இளவாலையில் சிக்கியுள்ள மக்களின் நலன்களைக் கவனிக்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் அடுத்த வாரம் அங்கு செல்லவிருக்கின்றனர்.

இந்த அதிகாரிகள் குழுவில் புதிதாக யாழ். அலுவலக வதிவிடப் பிரதிநிதியாக பொறுப்பேற்றுள்ள திரு. பியட் சுவஸ்ஸரும் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாதகல் பகுதி மக்களையும் இவர்கள் சந்திப்பதுடன், அங்கிருந்து சிலரை இங்கு அழைத்து வரவும் ஏற்பாடுகளைச் செய்வர் என்று தெரிவிக்கப்பட்டது (ஒ-3)

# 'குமாரி' சனி வந்து சேரும்?

தற்சமயம் கொழும்பில் பொருள்கள் ஏற்றிக் கொண்டிருக்கும் 'குமாரி' கப்பல் எதிர்வரும் சனிக்கிழமை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை மறுதினம் புதன்கிழமை கொழும்பில் இருந்து இந்தக் கப்பல் பருத்தித்துறை நோக்கி புறப்படும் என நேற்று மாலை தகவல் கிடைத்ததாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி தெரிவித்தார்.

இக்கப்பலில் 3 ஆயிரத்து 800 மெற்றிக் தொன் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் எடுத்து வரப்படுவதாகவும் —

தபால் பொதிகள் எடுத்து வரப்படுவது குறித்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் — அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஒ-3)

# மற்றும் ஒரு ஆணைக்குழு கலைப்பு!

கொழும்பு, மே 31

நாட்டில் உள்ள அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றி ஆராயவென மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவை தற்போதைய அரசாங்கம் கலைக்கவிருப்பதாக நம்பகமாகத் தெரியவருகிறது, கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது. (த-எ)

# எதிரணியை தன்பக்கம் இழுக்க அரசாங்கம் புதிய யுக்தி

## கட்சித் தாவல் தடை சட்டம் திருத்தம்

கொழும்பு, மே 31

கட்சித் தாவல் தடைச்சட்டத்தை திருத்துவதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்து வருவதாக அறியப்படுகிறது.

இது விடயத்தில் அரசு அவசரமாகச் செயற்பட இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

தென் மாகாணம், வடமேல் [illegible] மாகாணசபைகளிலும் எதி[illegible]னர்களைத் தமது பக்கம் இழுத்து அங்கு ஆளும்கட்சி ஆட்சியை உறுதிப்படுத்த அரசு விரும்புகிறது. அதனாலேயே கட்சித் தாவல் தடைச் சட்டத்தை அவசரமாகத் திருத்த முனைகிறது என்று "யுக்திய" இணையாசிரியர் வினி ஹெற்றிகொட கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

கட்சித் தாவல் தடைச் சட்டத்தைத் திருத்தி எம்.பிகளோ உறுப்பினர்களோ விரும்பின் மாற்றுக் கட்சிக்கு மாறுவதற்கு வகை செய்தால்]—

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சிறிமாவோ தலைமையில் அதிருப்தி அடைந்துள்ளவர்களும்—

சந்திரிகா குமாரணதுங்க அரசியலில் முன்னேறுவதை விரும்பாதவர்களும்—

குறிப்பாக ஹெல உறுமய அணியினரும், அவர்களின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பில் ஒரு நாள் இடம்பெயர்சேவை

கொழும்பு, மே, 31

எதிர்வரும் ஜூலையில் மட்டக்களப்பில் நடைபெறவுள்ள ஜனாதிபதி இடம்பெயர் சேவை ஒரு நாள் மட்டுமே இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் இத்தகவல் வெளியிடப்பட்டது. மாநாட்டுக்கு அமைச்சர் மன்சூர் தலைமை வகித்தார்.

## குறளகம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், மே 31

தமிழீழத் திருவள்ளுவர் மன்றத்தின் பணிமனை "குறளகம்" உரும்பராயில் அன்னை பூபதி கலையரங்கிற்கு அருகில் நிறுவப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. வெ. இளங்குமரன் "குறளகத்தை" இன்று மாலை 4-30 மணிக்குத் திறந்து வைப்பார்.

## டிப்ளோமா கல்விநெறி

யாழ்ப்பாணம், மே 31

கல்வி டிப்ளோமா பட்டப்பின் படிப்பு கல்வி நெறிப் பரீட்சை பகுதி I எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும், படிப்பு லீவில் நின்ற ஆசிரிய மாணவர்கள் நாளை மறுதினம் புதன்கிழமை தங்கள் கடமைகளுக்குப் பாடசாலைக்குச் செல்லுமாறும் யாழ் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை —

கல்வி டிப்ளோமா பட்டப்பின் படிப்பு கல்வி நெறி கற்பித்தல் பயிற்சி தொடர்பாக அறிவுறுத்தல் வகுப்பும் செயலமர்வும் எதிர்வரும் சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு நடைபெறும் என்றும், பயிற்சி மாணவர்கள் தத்தம் நிலையங்களுக்கு சமூகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஓ)

## சோதனை நிலையங்கள்

யாழ்ப்பாணம், மே 31

மட்டக்களப்புக்கும் வாளைச்சேனைக்கும் இடையில் புதிதாக ஆறு சோதனை நிலையங்களை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அமைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை — மட்டக்களப்பு கும்புறமுலை இராணுவ முகாமில் அமைக்கப்பட்டிருந்த சோதனை நிலையம் அகற்றப்பட்டு விட்டது. (ஓ-3)

## இன்று தேர்

தொல்புரம் மத்தி கொட்டடியம்பதி அருள் மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த தேர்திருவிழா இன்று திங்கள் காலை 9.00 வசந்த மண்டபப் பூசையுடன் ஆரம்பமாகி நடைபெறும். தீர்த்தத் திருவிழா நாளை நடைபெறும். (த 30)

## காவலிலிருக்கும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்ட இரண்டு பொலீஸாரை விடுவித்தனர்.

மேலும், 39 பொலிஸாரின் உறவினர்களும் யாழ்ப்பாணம் வந்து அவர்களைப் பொறுப்பேற்றால், அனைத்துப் பொலீஸாரையும் விடுவித்து அவர்களிடம் ஒப்படைக்கத் தயார் என்று விடுதலைப் புலிகள் கூறிவருகின்றனர்

ஆனால் பொலீஸாரின் உறவினர்கள் யாழ். செல்ல அனுமதித்தால், அவர்கள் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் படும் துன்பத்தைக் கண்டு வந்து வெளியுலகுக்கு கூறுவார்கள் என்றும் —

அது விடுதலைப் புலிகளுக்கு சிங்கள மக்கள் மத்தியில் அனுதாபத்தை ஏற்படுத்திவிடும் என்றும் ஸ்ரீலங்கா அரசு கருதுகிறது.

இதனால் காவலில் உள்ளவர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணம் சென்று அவர்களை மீட்க ஸ்ரீலங்கா அரசு மறுத்து வருகிறது.

— இவ்வாறு மேலும் தெரிவிக்கப்பட்டது. உ-ற-ர

## மாநகராட்சி மன்றத்தின் கிளை நூலகம் திறப்பு

யாழ்ப்பாணம், மே 31

தற்காலிகமாக மூடப்பட்ட யாழ். மாநகராட்சி மன்றத்தின் மூர் வீதிக் கிளை நூலகம் கொட்டடி நாவாந்துறைப் பகுதி வாசகர்களின் நன்மை கருதி மீண்டும் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நூலகம் நாவாந்துறை நீகன் நகர் ஏ. பி. ஒழுங்கை. வில்லியம் வீதியிலுள்ள கட்டடம் ஒன்றில் எதிர்வரும் 2 ஆம் திகதி காலை திறந்து வைக்கப்படும்.

இந் நூலகத்தின் அங்கத்

( 5 ஆம் பக்கம் பார்க்க)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சே. ஆ. கந்தசாமி [இராசு]**

தோற்றம்: 27—03—1939 மறைவு: 14—06—1989

திதி:- வைகாசி சுக்கிலபக்ஷ ஏகாதசி

எங்கள் கண்மணித் தெய்வமே! உங்கள் பொன்னான முகம் கண்டு, அன்பான குரல் கேட்டு ஆண்டுகள் நான்காகி விட்டனவே. எங்களுக்கு இந்த மீளாத் துன்பத்தை ஏன் தந்தீர்? உம்மை மறந்து வாழும் உபாயம் தெரியாது தவிக்கின்றோம். உங்கள் ஆன்ம ஈடேற்றத்துக்காக எல்லாம் வல்ல பத்திரகாளித் தாயாரை வேண்டி இந்நாளில் இறைஞ்சுகின்றோம்.

அன்பான மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்

நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

(25898)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 19 — 03 — 1932



மறைவு: 31 — 05 — 1991

வைத்திய கலாநிதி

**அமரர் ஜே. பி. சி. பிலிப்ஸ்**

[அகில இலங்கை சமாதான நீதிவான்]

ஆண்டு இரண்டானாலும் - என்றும்
ஆறாத மனத்துயருடன் - இதய
அஞ்சலிகள் செலுத்திடும்.

மனைவி, பிள்ளைகள்,
டாக்டர், ஊழியர்கள்.

பிலிப்ஸ் நேசிங் ஹோம்,
யாழ்ப்பாணம்.

(25896)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி

தோற்றம்: 01—03—1938 மறைவு: 05—12—1992

திதி:- சுக்கிலபக்ஷ ஏகாதசி

**திருமதி சரஸ்வதி வேலாயுதன்**

(யாழ். வேம்படி மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியையும், யாழ். பல்கலைக்கழக ஆங்கிலப் போதனாசிரியரும்)

உடன் பிறப்பு சோதரியே,
எந்தனுடன் பிறப்பே மூத்தமணி விளக்கே
தந்த உன் நடுநிலைத்துணையிலே நானிருந்தேன்
உந்தன் நினைவலையில் நொந்த மனம் ஆகிடவே
இந்த நாள் உன் நினைவின் மாதம் ஆறானதம்மா

சகோதரி திருமதி பொற்கொடி கந்தசாமி

நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

(25897)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி









| அமரர் | திருமதி | செல்வி | அமரர் |
|---|---|---|---|
| இராசையா மகாலிங்கம் | சிவபாக்கியம் மகாலிங்கம் | மதனகலா மகாலிங்கம் | சபாரட்ணம் சுபாஸ்சந்திரன் |
| பூவுலகில்: 1930 — 10 — 25 | பூவுலகில்: 1933 — 03 — 10 | பூவுலகில்: 1972 — 03 — 18 | பூவுலகில்: 1948 — 05 — 17 |

பொன்னுலகில்: 10 — 06 — 1992

திதி : 31 — 05 — 1993

கொடியவரின் ஆட்சியில் நீர் கொலையுண்டு போனீரே
இடி விழுந்தால் போல் நாம் ஏங்கி நிற்கின்றோம்
இல்லறப் பூஞ்சோலையிலே இனிதாக வாழ வைத்து
கொல்ல வைத்த இறைவன் செயல் கொடுமையிது கொடுமையிது
துயர் இன்னும் ஆறவில்லை கண்ணீர் வற்றவில்லை
காலமோ ஓராண்டு கண்கள் உறங்கவில்லை

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

ம குபேந்திரதாஸ் (ரவி)
திருநெல்வேலி.

(சி-5187)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 மாதங்களாகச் சம்பளம் இல்லை

இலங்கை தொல்பொருள் கூட்டுத் தாபனத்தின் யாழ்ப்பாணக் கிளையைச் சேர்ந்த சகல தர ஊழியர்களுக்கும் கடந்த 6 மாதங்களாக எதுவித சம்பளக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட ஊழியர்கள் இது தொடர்பாகக் கொழும்பிலுள்ள தலைமைச் செயலகத்துடன் பல தடவைகள் தொடர்பு கொண்ட போதும் எதுவித பலனும் கிடைக்கவில்லை என்று அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (த-30)

# முத்திரையிடல்

யாழ்ப்பாணம், மே 31

சங்கானை பிரதேச சபைக் காரியாலயத்தில் இன்று தொடக்கம் ஜூன் மாதம் 10ஆம் திகதி வரை காலை 8-30 மணி முதல் 1-30 மணி வரை நிறுத்தல், அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படுமென யாழ். செயலக நிறுவை. அளவை பரிசோதகர் பகுதியினர் அறிவித்துள்ளனர். (த-162)

# லலித் கொலையில் புதிய திருப்பமாம்!

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி கொலை விசாரணையில் புதிய திருப்பம் என்றும், ரகுநாதனே கொலையாளி என்பதை நீதிமன்றத் தீர்ப்பு உறுதிப்படுத்துகின்றது என்ற ரீதியிலும் அமைந்த செய்தி ஒன்றை தினகரன் வார மஞ்சரி வெளியிட்டிருக்கிறது.

அத்துலத் முதலியின் கொலை பற்றி விசாரணை நடத்திவரும் குற்றப்புலனாய்வுப் பணியகத்தினர், அடுத்த சில தினங்களில் விசாரணையில் முக்கிய திருப்பம் ஏற்படலாம் என்று நம்பிக்கை கொண்டுள்ளனர் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-எ)

# 100 பெண்களுக்கு திடீர் மயக்கம்

கொழும்பு, மே. 31

கொழும்பு - தெமட்டகொடையில் உள்ள ரசாயனப் பொருள் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்து வரும் சுமார் நூறு இளம் பெண்கள் நேற்று முன்தினம் இரவு கடமையின் போது திடீர் மயக்கமடைந்தனர்.

அவர்கள் அனைவரும் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (த எ)

## தேவை

**அழிஞ்சில்** பழமாகவோ அல்லது பழத்தின் உலர்ந்த வித்தாகவோ ஏற்கப்படும்.

தரத்திற்கேற்றபடி கணிசமான விலையும் கொடுக்கப்படும்.

விலாசம்: வைத்தியர் க. இராமசுவாமி,
"துவாரகை",
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(6221)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

31 — 05 — 1993



★ செல்வன் அனுத்திரன் ★

கோவிந்தராஜா - பேரின்பராணி தம்பதிகளின் செல்வ மகன் அனுத்திரன் தமது முதலாவது பிறந்த நாளை விநாயகப்பெருமான் திருவருளால் இன்று அவரது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை,

"இறைவழி நின்று
துறை பல கற்று
நிறைமதியென நீ வாழ்க
மன நிறைவோடு"

என வாழ்த்தும்; அப்பா, அம்மா, தர்ஷிகா அக்கா, பெரியப்பா குடும்பத்தினர் (உரும்பராய்), குட்டிச் சித்தப்பா (ஹொலண்ட்), சங்குவேலி அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், சித்திமார், ஆனந்தராஜா குடும்பத்தினர் (நல்லூர்), கதிரவேலு குடும்பத்தினர் (காரைக்காட்டு லேன்), கனடா அப்பம்மா குடும்பத்தினர் மற்றும் ஆசை அண்ணாமார், உற்றார், உறவினர், நண்பர்கள்;

இல. 64, காரைக்காட்டு லேன்,
வண். மேற்கு, யாழ்ப்பாணம். (25886)

## உ
ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம:

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

இறைவன் திருவருளை முன்னிட்டு நிகழும் மங்களகரமான ஸ்ரீ முக வருஷம் வைகாசித் திங்கள் 20ஆம் நாள் (02-06-1993) புதன்கிழமை காலை 5-52 மணிமுதல் 7-52மணி வரை வரும் சுபமுகூர்த்த சுப வேளையில்,

| திருநிறை செல்வன் **சுதாகரன் (சுதா)** அவர்களுக்கும் | திருநிறை செல்வி **ஜெயக்குமாரி (ஜெயா)** அவர்களுக்கும் |
|---|---|

வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் (நாச்சிமார் கோவில்) ஆலயத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம்

★ அன்புடன் அழைக்கின்றோம் ★

இரு வீட்டார் அழைப்பு

வரவேற்பு உபசாரம்

| மணமகன் இல்லத்தில் | மணமகள் இல்லத்தில் |
|---|---|
| 02 - 06 - 93 மாலை 3 - 00 மணி தொடக்கம் 5 - 00 மணிவரை. | [தற்காலிக இல்லம்] 620, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [நாச்சிமார் கோவில் முன்பாக] 02 - 06 - 93 மாலை 5 – 30 தொடக்கம் இரவு 7-30மணிவரை. |
| திரு. இ. பத்மநாதன் குடும்பத்தினர், (மணமகனின் தந்தை) 601, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். | திரு. திருமதி சரவணமுத்து கந்தசாமிபத்தர் குடும்பத்தினர். 947, கே. கே. எஸ். வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணம். |

(25856]

## திருநாடலங்கரித்த
## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மருத்துவக் கலாநிதி
**ஜே. பி. சி. பிலிப்ஸ்**
மறைவு: 31—05—1991

சராண்டு நொடிப் பொழுதாய் மறைந்ததையா
இதயத்தின் மணிவிளக்கே அன்பின் ஊற்றே
ஆருயிரே அருந்தவமே, எம்மையெல்லாம்
அரவணைத்த கருணையொளிச் சுடரேயிங்கு
நீராடுங் கண்களுடன் நெஞ்சம் வேக
நினைவினிலும் கனவினிலும் நேசம் பொங்கும்
பேரொளியின் நிறைமுகத்தைக் காண்கின்றோம் - நாம்
பெருமானார் திருமனையில் நீடு வாழ்க.

பிரிவாற்றாமையால் கலங்கி வாழும்;
சகோதரி, மருமக்கள்.

யாழ்ப்பாணம். (சி/5133)

## உ
சிவமயம்

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

இறைவன் திருவருளை முன்னிட்டு நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருஷம் வைகாசித் திங்கள் 20ஆம் நாள் [02-06-1993] புதன்கிழமை காலை 6-58மணி முதல் 8-05 மணி வரையுள்ள சுவாதி நட்சத்திரமும் இடப லக்கினமும் ★ கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில் ★

| திரு. திருமதி ஆறுமாமுகப்பெருமான் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **ரவிச்சந்திரன் (செல்வம்)** அவர்களுக்கும் | திரு. திருமதி இராசேந்திரன் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி **நிர்மலா** அவர்களுக்கும் |
|---|---|

திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு ★ அன்புடன் அழைக்கிறோம். ★

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| திருமதி தெ. ஆறுமாமுகப்பெருமான், A. G. A. ஒழுங்கை, வல்வெட்டித்துறை. | திரு. திருமதி நா. ஈ. இராசேந்திரன், (விவாகப் பதிவாளர்) காந்தி வீதி, வல்வெட்டித்துறை. |

(S/5136)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Honda C 70 விற்பனைக்குண்டு. தொடர்பு: பி. தருமநாயகம் (வங்கி முகாமையாளர்), 43/11, கலட்டி அம்மன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம் (கற்பகவினாயகப் பிள்ளையார் கோவில் முன்பாக). பார்வையிடும் நேரம் வெள்ளி, சனி, ஞாயிறு காலை 8 மணி தொடக்கம் 11 மணி வரை)

(25893

### பெயர் மாற்றம்

யாழ். நகரைவசிப்பிடமாகக் கொண்ட ''கணேசா'' ஆகிய எனது பெயர் K.V. Kanesalingam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K.V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(25537)

### லிகிதர் தேவை

யாழ் நகரில் இயங்கும் ஸ்ருடியோ ஒன்றிற்கு பெண் லிகிதர் தேவை யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. 10 06-93 இற்கு முன் விண்ணப்பிக்கவும். இல. 906, மே/பா உதயன்

(6223)

### (O/L) MATHS

புலமைப் பரிசில் வகுப்பில் இருந்து O/L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும், ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (25891)

### 10 நாள் பயிற்சி

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் சுகாதார பயிற்சியாளர்களாகக் கடமையாற்றும் 10 பேர், ஆரம்ப சுகாதாரபராமரிப்புத் தொடர்பான 10 நாள் மேலதிக பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்காக களுத்துறையிலுள்ள தேசிய சுகாதார கல்வி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர். (த-162)

---

# BITSMANS
## கல்வி நிறுவனம்
மானிப்பாய்.

# 93 O/L
இறுதிப் பிரிவு

## DAY CLASS

எமது வழமையான Super Grade ஆசிரிய குழுவினால்

**ஆரம்பம்: 01 - 06 - 1993**

செவ். காலை 8 00

**புதிய பிரிவு ஆரம்பம்:**
SPOKEN ENGLISH
By M. A. ஹரி
திங்கள், வெள்ளி 9-00 a. m. (சி-4779)

---

கோண்டாவில் கிழக்கு
ஸ்ரீ ஞானப்பழனி முருகன் ஆலயம்

## 7ஆம் திருவிழா விஞ்ஞாபனம்
(கைலாய வாகனம்)

இன்று 31 - 05 - 1993 திங்கட்கிழமை
சிற்பாசிரியர் ஆறுமுகம் கந்தசுவாமி அவர்களுக்கு
**பாராட்டு விழா பி. ப. 3-30 மணி**

ஆசியுரை:
நல்லை ஆதீன முதல்வர்

பாராட்டுரை:
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
திரு. ஆ. மகாலிங்கம்
(நல்லூர் உதவி அரசாங்க அதிபர்)
அருட்கவி வினாசித்தம்பி அவர்கள்
திரு. ஆறு திருமுருகன்
(கம்பன் கழகப் பேச்சாளர்)

மங்கள இசை:
R. S. சுவாமிநாதன் குழுவினர்
N. K. பத்மநாதன் குழுவினர்
V K. கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி குழுவினர்

பெரிய புராண தொடர் விரிவுரை:
திரு. ஆறு திருமுருகன்

இன்னிசை விருந்து:
சாந்தன் குழுவினர்

புதிதாக அமைக்கப்பட்ட
கைலாய வாகனத்தில் ஸ்ரீ பழனி முருகன்
வீதிவலம் வருவார் (பி. ப. 7-00 மணி)

ஒளியமைப்பு: மனோலைற் – கோப்பாய்
ஒலி அமைப்பு: றோயல் சவுண்ட் சேர்விஸ், அரியாலை

★ அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– 7ஆம் திருவிழா உபயகாரர்.

● பெரியபுராண தொடர் விரிவுரையாற்றும் திரு. ஆறு. திருமுருகன் அவர்கள் 05 – 06 – 1993 சனிக்கிழமையன்று பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளார்.

(25892)

---

வலி. கிழக்கு
வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## விசேட அறிவித்தல்

எமது சங்க எல்லைப்பரப்பிலிருந்து இடம்பெயர்ந்து வேறு சங்க எல்லைப் பரப்பில் வசிக்கும் இலவச நிவாரணம் பெறுபவர்கள் தங்களது உலர் உணவு அட்டை, உலர் உணவு முத்திரை, உணவு பங்கீட்டு அட்டை என்பவற்றுடன் நேரடியாக எமது சங்க தலைமைப் பணிமனைக்கு (ஆவரங்கால், புத்தூர்) சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வலி. கிழக்கு
வட பகுதி ப. நோ. கூ. சங்கம்.

அச்சுவேலி.

(சி-5177)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
19 — 12 — 1942

மறைவு:
11 — 06 — 1992



### அமரர் மாணிக்கம் தங்கவடிவேல்
(ஓவசியர், பெருந்தெருக்கள் திணைக்களம்)

திதி: 31 — 05 — 1993

ஆண்டொன்று வந்துநித்தும் ஆறாது ஆறாது
அனலான எம்முள்ளம் தேறாது தேறாது
மூண்ட தீ எம்மகத்தே அணையாது அணையாது
முகமலர்ந்த நின் சிரிப்பு மறையாது மறையாது
பூண்ட நின் லட்சியங்கள் நிறைவாக நிறைவாக
புதல்வியரைக் கல்வியூட்ட அயராது அயராது
வேண்டுமுன் பொழுதெல்லாம் உயர்வாக்க உயர்வாக்க
விரும்பியதைப் பெற்றகணம் காணாமல்–
போயினையே
ஆண்டவன் காலடியில் நல்லாசி தேடினையோ
அணையா எம்குலவிளக்கே நின் நினைவாலே–
வாடுகின்றோம்.

மனைவி, மக்கள்.

''தங்கத்தாமரை''
அல்வாய்.

(25877)

---

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருடம் வைகாசித் திங்கள் 20ஆம் நாள் (1993-06-02) புதன்கிழமை முற்பகல் 11 05 மணிமுதல் 11-50 மணி வரையுமுள்ள சிங்க லக்கின
★ சுபமுகூர்த்த வேளையில் ★

| | |
|---|---|
| எமது ஏகபுத்திரன்<br>திருவளர் செல்வன்<br>**செங்கதிர்ச்செல்வன்**<br>B. A. Hons<br>(தமிழ் விரிவுரையாளர்,<br>யாழ். பல்கலைக்கழகம்)<br>அவர்களுக்கு | எமது புத்திரி<br>திருவளர் செல்வி<br>**ஆனந்தவனிதை**<br>B. A.<br><br>அவர்களை |

இறையருள் துணை கொண்டு மணமகன் இல்லத்திலே திருமணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, மணமக்களை வாழ்த்தி, வைபவத்தைச் சிறப்பிக்குமாறு
★ அன்புடன் அழைக்கின்றோம். ★

வரவேற்புபசாரம் மணமகன் இல்லத்தில் 1993-06-04 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்;

இளைப்பாறிய அதிபர்,
திரு. சி. பொன்னையாவும் பாரியாரும்
குடும்பத்தினரும்,
37 அன்னசத்திர ஒழுங்கை,
சுந்தர்மடம், யாழ்ப்பாணம்.

திரு இ. நடராஜாவும் பாரியாரும்
குடும்பத்தினரும்,
விநாயகர் ஸ்ரோர்ஸ்,
கண்டி வீதி, சாவகச்சேரி.

(6218)

(இரு வீட்டார் அழைப்பு)

---

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வினாசித்தம்பி ஐயாத்துரை

தோற்றம்: 02—11—1912
மறைவு: 10—06—1992

திதி: 31—05—1993

அன்பின் ஒளிவிளக்காய், குடும்பத்தின் நிகரற்ற தலைவனாய், எமக்கு எல்லாம் நல் வழி காட்டியாய் வாழ்ந்த எங்கள் தெய்வமே! உங்கள் ஆத்ம சாந்திக்காக நாம் என்றும் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

லதா பவனம்,
இணுவில்.

(சி/4780)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உள்ளூர் உற்பத்தியை புறக்கணித்தால் .

தமிழீழப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பெருமளவு பனைவெல்லம்விற்பனையின்றித் தேங்கிக் கிடக்கிறது. அதன் காரணமாக, பனை வெல்ல உற்பத்திக்குத் தங்கள் நிதி வளங்களைப் பயன்படுத்திய தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களும், பனை வளம் சார் தொழிலாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். செய்வதறியாது மனம் உடைந்து விரக்தியுற்று வேதனைப்படுகிறார்கள்.

பனை வெல்ல உற்பத்தியின் நடைமுறைப் பிரச்சினைகளை உணரும் தன்மை இப்பகுதி மக்களிடம் இல்லை என்பதனையே அதன் தேக்கமும், உற்பத்தியில் ஈடுபட்டோரின் வேதனையும் எடுத்துக் காட்டுகின்றன

எந்த மக்கள் நலன் கருதி பனை வளம் சார் தொழிலாளர்களும், தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தினரும் உள்ளூர் உற்பத்தியில் முனைப்புடன் ஈடுபட்டார்களோ, அந்த மக்களே அவர்களைக் கைவிட்டு விட்டார்கள். அதனால் உற்பத்தியாளர்கள் நட்டமுற்று நலிந்து வேதனைப்படுகிறார்கள். உதவி செய்யப் போய் உபத்திரவத்தை வாங்கிக் கொண்டவர்கள் ஆகிவிட்டார்கள்!

பனை வளம் குடாநாட்டின் மதிப்பிடற்கரிய மூலவளம். நிரந்தரமான பொருளாதார வளம். அந்தத் துறைக்கே இந்தக் கதியானால் வேறெந்த உற்பத்தித்துறையில் எவரும் ஈடுபட முனைவர்?

எந்த உற்பத்தியும் லாபகரமானதாக இயங்கி நல்ல பெறுபேறு தர வேண்டுமாயின் உரிய நுணுக்கங்கள், தந்திரங்களுடன் சந்தைப்படுத்தல் வசதியும் உரியவாறு கட்டமைக்கப்பட வேண்டும். உள்ளூர் உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் வெற்றிக்கு தனியார், கூட்டுறவு, அரச துறைகள் பக்கபலமாக நிற்க வேண்டும்.

ஈழத் தமிழர்கள் அரசியல் சுதந்திரம் பெறவேண்டுமாயின் தமது வளங்களையும், உழைப்பையும் சேர்த்து சுயதேவைகளைப் பூர்த்தி செய்து, தமது சொந்தக் கால்களில் நிற்கும் வல்லமை பெற வேண்டும். அதற்குக் கைகொடுத்து உதவக் கூடியது உள்ளூர் உற்பத்திப் பெருக்கமே. தற்சார்பு பொருளாதார வழிமுறையே வாழ்வு தர வல்லது.

இதனைப் புரிந்துகொண்டவர்கள், உணர்ந்துவிட்டவர்கள் போல எம்மில் பலரும் பேசுகிறோம், எழுதுகிறோம். ஆனால் நடைமுறையில், உள்ளூர் உற்பத்திகளுக்கு ஊக்கமளிக்காமல், கப்பல்களில், லொறிகளில் வரும் பொருள்களையே அடிபட்டு வாங்குகிறோம். அதிக விலை கொடுத்து உண்ணுகிறோம்.

உள்ளூர் உற்பத்திகளுக்கு மக்கள், நுகர்வோர் போதிய ஆதரவளித்தால் மட்டுமே அவை தொடர்ந்து வளர முடியும். அப்போது அவை தாமாகவே தரம் உயர்ந்தும், ருசி நிறைந்தும், பெறுபேற்று விளைத்திறன் பெருகியும் எல்லா வகைகளாலும் தம்மை உயர்த்திக்கொள்ள முடியும். இல்லையேல் அவற்றை இழுத்து மூடுவதைவிட வேறுவழி இருக்காது புதிய உற்பத்தித்துறைகளை இனங்கண்டு உற்பத்திகளை பெருக்குவதற்குப் பதிலாக உள்ளவற்றுக்கு மூடுவிழா நடத்தப்படுமானால் தமிழர்களில் அதிக சதவீதத்தினர் பட்டினியால் சாகும் அளவுக்கு பொருளாதாரம் பலவீனமுற்றுவிடும்.

மொத்தத்தில் உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவளிக்காது புறக்கணிக்கும் சமூகம், எந்த வகையிலும் சுபிட்சம் காணமுடியாது. இங்கு பொருளாதாரத்தில் — இறக்குமதிப்பொருளாதாரத்தில்—நம்பிக்கை வைத்தால் நாசத்தை எதிர்நோக்க வேண்டியே ஆகும். இதனை எல்லாத் தமிழர்களும் மனதில் இருத்தித் தங்களை நடைமுறையில் நாளாந்த வாழ்க்கையில் திருத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் என்றும் ஆபத்துத் தொடரும்!

# யாழ். பாடசாலையின் விருத்திக்கு பெற்றோர்களே உதவ வேண்டும்

## அரசு தரும் நிதி போதாது என்கிறார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், மே 31

யாழ். பிரதேசப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு அரசாங்கம் வழங்கும் பணம் போதாது. ஆகையால் கல்வித் திணைக்களத்தினால் எமது பாடசாலைகளுக்கு பெரிதாக எந்த உதவியையும் செய்ய முடியவில்லை.

இந்த நிலையை உணர்ந்து பாடசாலைகளின் வளர்ச்சிக்கு பெற்றோர்களே உதவ வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. யாழ். இந்து மகளிர் கல்லூரி இன்று தலை நிமிர்ந்து நிற்பதற்கு அதன் வளர்ச்சிக்கு பெற்றோர்கள் உறுதுணையாக நிற்பதே காரணமாகும்

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பொன்விழா கால்கோள் நிகழ்வு சனிக்கிழமை காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திருமதி தி. நாகராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது;

யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களத்துக்கு அரசு வழங்கும் பணம் போதாது. வளங்களும் போதா. மூன்று லட்சம் மாணவர்கள் கல்வி பயிலும் குடாநாட்டுக்கு இரண்டாயிரம் கதிரைகளும் மேசைகளுமே கிடைத்துள்ளன. வெண்கட்டிப் பெட்டிகள் ஆயிரம் மட்டுமே கிடைத்துள்ளன. அப்பியாசக் கொப்பிகளோ ஆனையின் வாயில் போட்ட அறுகம்புல் போன்றது.

இந்த நிலையில் எமது பாடசாலைகளின் அபிவிருத்திக்குப் பெற்றோர்களே உழைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

### எதிர்கால கல்வி வளம்

யாழ் குடாநாட்டில் பதினேழு பெண்கள் பாடசாலைகள் உள்ளன. அவற்றில் பத்துப் பாடசாலைகளே முன்னின்று செயற்படுகின்றன. இவற்றுள் யாழ் இந்து மகளிர் கல்லூரியும் முக்கிய இடத்தை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது எங்கள் மண்ணின் எதிர்காலக் கல்வி வளம் மாணவர்களிலேயே தங்கியுள்ளது.

யாழ். இந்து மகளிர் கல்லூரியை தேசிய கல்லூரி அந்தஸ்துக்கு உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை இக்கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் இரண்டு தடவைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் கல்வி அமைச்சிலிருந்து இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை.

உலகம் முன்னேறிக்கொண்டிருக்கிறது. அதற்கேற்றவாறு எமது மாணவர்கள் புதியவற்றைக் கற்க வேண்டும். ஆசிரியர்களும் தமது போதனை வளத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்—என்று அவர் தெரிவித்தார்.

### உந்துசக்திகள்

தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் சிறப்புரை நிகழ்த்தியபோது தெரிவித்ததாவது:-

முற்காலத்திலே எமது பெண்கள் கல்வி கற்க முடியாது ஒதுக்கப்பட்டிருந்தனர். இன்று அந்நிலை மாறி பெண்களும் தமது கல்வியைத் தடை எதுவுமின்றிப் பெறமுடிகிறது. பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு இது போன்ற பெண்கள் கல்லூரிகளின் உழைப்பு முக்கியமானது. எதிர்காலத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பில் தங்கியுள்ள

# மலையக இளைஞர்களை கைது செய்ய வேண்டாம்!

## இ. தொ. கா. பிரமுகர் கோரிக்கை

கொழும்பு, மே 31

தொழில் பார்ப்பதற்கென கொழும்பில் தங்கியுள்ள மலையக இளைஞர்களை அனாவசியமாகக் கைது செய்யவேண்டாம்.

பதுளை மாவட்ட எம் பியும் இ. தொ. கா இணைச் செயலாளருமான டி. வி. சென்னன் பொலீஸ் மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் முன்கண்டவாறு கோரியுள்ளார்.

கொழும்பில் பொலீஸார் சந்தேகத்தின் பேரில் மலையக இளைஞர்களை அடிக்கடி கைதுசெய்து வருவதால் மலையகத்தில் பதற்ற நிலை ஏற்படுவதாகவும்—

இதனைத் தவிர்க்க அனாவசியக் கைதுகளை நிறுத்தும்படியும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

(த எ)

# பிரதிப் பதிவாளர் நாயகம் பணிமனை யாழ். நகரில்!

யாழ்ப்பாணம், மே 31

வடபிராந்திய பிரதிப் பதிவாளர் நாயகம் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் இயங்க ஆரம்பித்தது.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா பிரிவுகளில் உள்ள மக்களின் பதிவு வேலைகள் இனி மேல் இந்த அலுவலகத்தினாலேயே மேற்கொள்ளப்பட இருக்கிறது.

காலம் பிந்திய இறப்பு, பிறப்பு வேலைகள், பெயர் மாற்றங்கள் தொடர்பான வேலைகள் ஆகியவையும் இந்த அலுவலகத்தால் மேற்கொள்ளப்படவிருக்கின்றன

[உ-3]

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 30

''கே. எஸ். ஸி. ஸி. கிண்ணத்துக்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் நடத்திவரும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத் தொடரில் நாளை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு;-

★ காலை 8.30 மணி:- சுப்பர் ஸ்ரார் வி. க. அணி எதிர் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணி.

★ பிற்பகல் 1.00 மணி:- ஷப்ரா அணி எதிர் ஜொலி ஸ்ரார்ஸ் அணி.

o 0 o

'உதயன்' கிண்ணத்திற்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம், பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடத்திவரும் — ஏழுபேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ மணற்காடு சென். அன்ரனீஸ் வி. க. அணி எதிர் விநாயகர் வி. க. அணி.

★ நியூட்டன் ''பி'' அணி எதிர் டயமன்ஸ் ''ஏ'' அணி

o o o

கராட்டி செய்முறைக் காட்சி ஒன்று நாளை மறுதினம் புதன்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறும். யாழ்ப்பாணம் சோட்டோகான் கராட்டி சங்க மாணவர்களும் யாழ். பல்கலைக்கழக கராட்டி பயிலும் மாணவர்களும் இணைந்து இந்த செய்முறைக் காட்சியை நடத்துவர். யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

o o o

ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் வைகாசிப் பெருநாளை முன்னிட்டு வருடாந்தம் நடத்திவரும் — திருமணமானவர்களுக்கும் திருமணமாகாதவர்களுக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி — இன்று பிற்பகல் 1.30 மணிக்கு யூனியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

o o o

''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். றோட்டறக்ட் கழகம் நடத்தி வரும்— ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — ஹொக்கிச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று மாலை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன. பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3 45 மணி:- கிறாஸ்கொப்பர்ஸ் பச்சை அணி எதிர் கிறாஸ்கொப்பர்ஸ் இளம் அணி.

★ மாலை 5 மணி:- யாழ். பல்கலைக்கழக கோல்ட்ஸ் அணி எதிர் யாழ். பல்கலைக் கழக நீல அணி.

o o o

சுன்னாகம் வளர்பிறை விளையாட்டுக் கழகம்— 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் — சுன்னாகம் சிங்கமாப்பாணர் விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு;-

★ பிற்பகல் 3.30 மணி:- ஊரெழு றோயல் வி. க அணி எதிர் சுன்னாகம் ஜொலி போய்ஸ் வி. க. அணி,

மாலை 4.30 மணி:- மயிலங்காடு ஞானகலா வி. க. அணி எதிர் [illegible] ஸ் வி. க. அணி.

# உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம் மே 31

யாழ். மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் முகமாக கொழும்பிலிருந்து விவசாய உள்ளீடுகளையும், பொருள்களையும் தருவித்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையில் அண்மையில் நடைபெற்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மற்றும்பொது முகாமையாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில்இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

விவசாய உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தினூடாகத் தருவிக்கப்படும் இப் பொருள்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக விநியோகிக்கப்படும்.

(த-162)

### மாநகராட்சி...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தவர்களாகப் பதிவு செய்தவர்களின் அங்கத்துவ காலம் முடிவடைந்துவிட்டதால் சகல அங்கத்தவர்களும் மீண்டும் தமது அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது

[த-162]

இணுவில் கந்தசாமி கோயில்
ஸ்ரீமுக வருஷ மஹோற்சவ
தெய்வீக இசையரங்கில்
இன்று 31-05-93 திங்கள் மாலை 7.30மணிக்கு
சங்கீத வித்துவான்
திருமதி T. ஆனந்தகுமாரசாமி — பாட்டு
திரு S. வெங்கடேஸ்வர சர்மா — வயலின்
செல்வன் S. கமலதாசன் — மிருதங்கம்
26-6-93 வரை தொடர்ந்து இசை நிகழ்ச்சிகள் தினமும் நடைபெறும்,
இளந்தொண்டர் சபையினரும் விழா உபயகாரர்களும்
(25906)

நல்லூர் மத்திய மறுமலர்ச்சிக் கழக
(ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகம்)
கலை விழா
இடம்: நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய மைதான அரங்கு
காலம்: 13 - 06 - 1993 மாலை 5-30 மணி
நிகழ்ச்சிகள்
● பரதநாட்டியம்
செல்வி வாசுகி ஞானச்செல்வம்
● மெற்றாஸ்மயில் நெறியாள்கையில்
கண்ணகி வழக்குரை
(ஆட்ட நாட்டுக் கூத்து)
த. வி. பு. இ. கலை, பண்பாட்டுக் கழகம் வழங்கும்
● களத்தில் காத்தான்
(சிந்து நடைக் கூத்து)
● ஈழநல்லூர் மண்டலேஸ்வரன்
மெல்லிசை குழுவினரின்
இன்னிசை வார்ப்புகள்
★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

விளம்பர அன்பளிப்பு!
ஆண்டு 4 தொடக்கம் ஆண்டு 11 வரை, 5 ஆம் ஆண்டு விசேட புலமைப் பரிசில் வகுப்புகள் உட்பட நடைபெறுகின்ற.
உதயன் அக்கடமி
(யாழ். மாநகரசபை முன்பாக)
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(25895)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NOTICE

**SAMUEL, SONS & CO. LTD,**

We regret to announce the death of MR. PETER SAMUEL, Chairman / Managing Director of SAMUEL, SONS and CO. LTD. on 29-5-93, in Colombo. As a mark of respect our establishments at 208, Hospital Road, Jaffna and at No 17, Ghemmani Road, Nallur will be closed on 31-5-93.

Manager
Samuel, Sons & Co. Ltd.
Jaffna


## அறிவித்தல்

எங்களது தலைவரும், நிர்வாக இயக்குநருமாகிய திரு. பீற்றர் சாமுவேல் கொழும்பில் 29-5-93 ஆம் திகதியன்று காலமானார் என்பதை மிகவும் வருத்தத்துடன் அறிவிக்கின்றோம். அவருக்கு மரியாதை செலுத்துமுகமாக 31-5-93 திங்கட்கிழமை ஆஸ்பத்திரி வீதியிலும், செம்மணி வீதியிலும் இருக்கும் எங்களது ஸ்தாபனங்கள் மூடப்பட்டிருக்கும் என்பதை அறியத் தருகிறோம்.

முகாமையாளர்
சாமுவேல் சன்ஸ் அன்ட் கொம்பனி

(C/5185)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



மண்ணில்: 22–04–1962
விண்ணில்: 01–05–1993

### பந்துபாலன் நவரெத்தினம்

(தபால் ஊழியர் வவுனியா)

அன்பின் திருவுருவாய் அறிவின் திருவிளக்காய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
உலாவி வருவாய் என்றிருந்தோம்
நீ எங்குதான் சென்றாயோ

உன் நினைவில் வாடும்
பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்கள், மருமக்கள்.

699/2, கே. கே எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(25901)

## மரண அறிவித்தல்

திருமதி
### விக்கினேஸ்வரன் கனகேஸ்வரி
(அளவெட்டி வடக்கு)

தம்பாகலட்டி, அளவெட்டி வடக்கைச் சேர்ந்த திருமதி விக்னேஸ்வரன் கனகேஸ்வரி (அ. ம. ப. நோ. கூ. சங்க வங்கி உத்தியோகத்தர்) 30-5-93 இல் காலமானார். அன்னார் இளைப்பாறிய ஆசிரியர் சரவணமுத்து சுப்பிரமணியம் – இராசம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வியும், நாகமுத்து சின்னத்துரையின் அன்பு மருமகளும், சி விக்கினேஸ்வரனின் அன்பு மனைவியும், யசோகன், துவாகரன், கிரிவரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சு. கனகசபையின் சகோதரியும், தர்ஷினி, பரமேஸ்வரன் (அ. ம. ப. நோ. கூ. சங்கம்), இராஜேஸ்வரி, விசயரத்தினம் ஆகியோரின் மைத்துனியும், பிருந்தா, பிரணவன், ப. பிறேமினி (ஆண்டு 12, மகாஜனாக் கல்லூரி), ஸ்ரீதவன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 31 – 5 – 93 திங்கள் காலை 9 மணிக்கு 3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காட்டில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி. விக்கினேஸ்வரன்

3 ஆம் கட்டையடி,
கல்வியங்காடு.

(25900)

## யாழ். பாடசாலை...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திலே பெண்கள் முழுமையான அறிவைப் பெறுவதற்கு இது போன்ற கல்லூரிகளின் செயற்பாடுகளுக்கு பெற்றோரும், ஆசிரியர்களும் உந்து சக்திகளாக விளங்க வேண்டும் — என்றார்.

காலை 8 மணிக்கு கல்லூரி வளாகத்தில் உள்ள இராஜ வரோதயப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற விசேட அபிஷேக, ஆராதனைகளுடன் பொன்விழாவில் கால்கோள்விழா நிகழ்வு ஆரம்பமாகியது ஆலயத்திலிருந்து பிரதம விருந்தினர், மற்றும் பிரமுகர்கள் மங்கள இசையுடன் மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.

தேசியக் கொடியை தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. வே இளங்குமரனும் கல்லூரிக் கொடியை பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கமும் ஏற்றிவைத்தனர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், சிவதர்ம வள்ளல் கலாநிதி க. கனகராசா, சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

மற்றும் பல பிரமுகர்கள் கல்லூரியின் சேவைகளைப் பாராட்டி, கல்லூரி மேலும் வரை வாழ்த்துரை நிகழ்த்தினர்.

பெற்றோர்கள், பழைய மாணவிகள், பிரமுகர்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டதால் கல்லூரி மண்டபம் நிரம்பி வழிந்தது. (அ-162)

## எதிரணியை ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாளர்களும் ஐ தே. கவுக்கு மாறலாம் என்று அரசு எதிர்பார்க்கிறது.

அதனாலேயே கட்சித் தாவல் தடைச் சட்டத்தை மாற்றுவதில் அரசு தீவிரமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. (அ-6)

## பேச்சுக்கள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யோசனைகளில் சகலருக்கும் ஏற்புடையதான யோசனை குறித்து இணக்கப்பாட்டுக்கு வருவதே அவசியமானதாகும்

அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைப்பதற்கு அமைதியான சூழ்நிலை ஒன்று தோன்றவேண்டியது அவசியமாகும்.

### நிராயுதபாணிகள் ஆக்கவேண்டும்

தீவிரவாதிகளை நிராயுதபாணிகளாக்க வேண்டிய தேவையும் உள்ளது.

உண்மையில் நாம் அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றில் அக்கறை கொண்டவர்களாக இருப்பதினால் நிலையான அமைதிச் சூழ்நிலை அவசியமாகும்.

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டம் ஒன்று தயாரானால் அதை நடைமுறைப்படுத்த அரசமைப்புத் திருத்தங்கள் கொண்டு வருவதும் அவசியமாகின்றது.

### இணக்கத்துக்கு வரமுடியவில்லை

அதிகாரப் பரவலாக்கலை அதிகப்படுத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். ஆனால் அதிகாரப் பரவலாக்கல் அலகு தொடர்பாக இன்னமும் இணக்கத்துக்கு வரமுடியாமல் உள்ளது. இது ஒரு பிரதான விவகாரமாகும். ஏனைய விவகாரங்களில் இணக்கப்பாடு சாத்தியமானதாக உள்ளது. பல விவகாரங்களில் முன்னேற்றம் கண்டுள்ளோம்.

### தெரிவுக்குழு புலிகளுடன் பேசத் தயார்

நாடாளுமன்றத் தெரிவுக்குழு விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு கதவைத் திறந்து வைத்துள்ளது. ஆனால் விடுதலைப் புலிகள் தான் முன்நிபந்தனை விவகாரத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக்கொண்டு பேச்சுக்கு வராமல் இருக்கிறார்கள்.

ஏனைய தமிழ்க் கட்சிகளும் அதிகாரப் பரவலாக்கல் குறித்து இணக்கப்பாடு ஒன்றுக்கு இன்னமும் வரமுடியாமல் இருக்கின்றன — இவ் [illegible] ஒரு பகுதி அமைந்துள்ளது.

## அரச அதிபருக்கு மகஜர்

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் நிலவும் எழுதுவினைஞர் பதவி வெற்றிடங்களுக்கு, 1992 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட தெரிவுப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களை நியமிக்குமாறு, பாதிக்கப்பட்டோர் சார்பாக யாழ். அரசாங்க அதிபருக்கு மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

அப்போது நடத்தப்பட்ட பரீட்சையில் 304 பேர் சித்தி அடைந்தனர் என்றும்—

அவர்களில் 200 பேருக்கு மட்டுமே நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்றும்—

ஏனையோர் இன்றும் வேலையற்றிருப்பதால் அரச திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு, அவர்களை நியமிக்குமாறும்—

பாதிக்கப்பட்டோர் சார்பாகக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ)

## மரண அறிவித்தல்கள்

### சிவசம்பு நடரர்சா (பத்தர்)

ஆனைப்பந்தியை வசிப்பிடமாகக் கொண்ட சிவசம்பு நடராசா 30-5-93 பிற்பகல் சிவபதமடைந்துவிட்டார். இவர் திருமதி சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சோதிலிங்கம், விநாயகலிங்கம், சுந்தரலிங்கம் (மெக்கானிக் கொழும்பு), திருமதி ஞானேஸ்வரி பாலசுந்தரன், வாமதேவா (C. E.B. வவுனியா), மகாதேவா (கனடா), பற்குணநாதன், புஷ்பநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. பாலசுந்தரன் (முன்னாள் Cey-sik Ltd ஊழியர்), மகாலெட்சுமி, லலிதாம்பிகை, சோதிமலர் (கோப்பாய்), இராஜேஸ்வரி (கச்சேரியடி), நாகேஸ்வரி (நல்லூர் தெய்வராணி (நீர்வேலி), விஸ்வதேவி (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி), திருமதி வியாகம்மா திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி அங்கயற்கண்ணி கயிலாயநாதன், பரந்தாமன் (ஜேர்மனி), காலம் சென்ற திருமதி பவானி ஜெய்சங்கர் சஜேந்திரன், மோகனா, சுகிர்தா, முகுந்தன், கலைவாணி, சுரேஜினி, ஷர்மினி நிஷாந்தினி, அனிதா, அருச்சுணன், வினோத், சஞ்சீவன், மயூரி ஆகியோரின் அன்புப் பேரனும், ரதீகா, குருநேஷன், ஜெய்பவான் ஆகியோரின் பூட்டனுமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (1 – 6 – 93) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு காலை 10.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
ந. சோதிலிங்கம்

120, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

[25904]

### சுப்பிரமணியம் கனகம்மா

வேலணை கிழக்கு, 4 ஆம் வட்டாரத்தை சேர்ந்த சுப்பிரமணியம் கனகம்மா 11 – 3 – 93 இல் வேலணையில் காலமானார். இவர் சிவயோகம், மங்கையர்க்கரசி, திருநாவுக்கரசு ஆகியோரின் தாயார் ஆவார். இறுதிக்கிரியைகள் வேலணையில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்க்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:
சு. சசி

(25902)

### குழந்தைவேலு தியாகராஜா

அனலைதீவு 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தில் வசித்தவரும், தற்போது இராஜ வீதியில் வசித்தவருமாகிய திரு. குழந்தைவேலு தியாகராஜா 30-5-93 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் குழந்தைவேலு பொன்னம்மாவின் அன்பு மகனும், சிவரெத்தினத்தின் அன்புக் கணவரும், தம்பையா-வள்ளியம்மையின் அன்பு மருமகனும், சந்திரசேகரம், இராசம்மா, சிவகாமி, காலஞ்சென்றவர்களாகிய நாகேந்திரம், சௌந்தரம், துரைச்சாமி ஆகியோரின் சகோதரரும், செல்லம்மா, கதிரேசு, யோகம்மா, கௌரிநாயகி, குகதாசன், காலஞ்சென்றவர்களாகிய பாலரத்தினம், பேரம்பலம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (31-5-93) இராஜ வீதி கோப்பாய் இல்லத்தில் நடைபெற்று, 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பால்பண்ணை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
தி. சிவரெத்தினம்
(மனைவி)

K. சோமசேகரம்பிள்ளை
இராஜபாதை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(25903)

### கந்தையா கணேசு

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா கணேசு காலமாகிவிட்டார்.

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 61/3, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் காலஞ்சென்ற அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற யோகம்மா, கனகலிங்கம், மகாலட்சுமி, தனலட்சுமியின் தந்தையும், காலஞ்சென்ற இராசலிங்கம், சிவகுருநாதன், தனலட்சுமியின் மாமனாரும், நாகேசு, நடராஜா (றேடியோ சிலோன்), நடராசா-புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 31-5-93 மாலை 4 00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சி. மகாலெட்சுமி
(மகள்)

61/3, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்திச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(25905)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 892/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 31 – 05 – 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org